**சனாதிபதி நிதியம் - 2022**

----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சனாதிபதி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

நிதிக்கூற்றுக்களில் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 95 நோயாளிகள் சார்பாக மொத்தம் ரூபா 17,252,501 2022 திசெம்பர் 31 இல் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டியிருந்நது. அதில் 67 நோயாளிகள் சார்பாக மொத்தம் ரூபா 11,377,501 ஆன தொகையொன்று 01 முதல் 3.5 வருட காலப்பகுதிக்குள் செலுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த 95 நோயாளிகளில் 86 பேருக்கு தற்போது ரூபா 15.47 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் விரைவு படுத்தப்பட வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 இல் தனியார் மருத்துவமனைகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் சிகிச்சை பெறுவதற்கான ஏற்பாடுகளுக்காக நிதியத்திலிருந்து அந்நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய மருத்துவ உதவிகள் 31 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 4,011,100 ஆன பெறுமதியொன்று செலுத்தப்பட வேண்டியதாக காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தம் ரூபா 2,827,050 ஆன தொகையொன்று 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான கால வீச்சில் செலுத்தப்பட வேண்டியிருந்ததாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இம்மருத்துவ உதவி 31 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 4,011,100 ஆன தொகை தற்போது செலத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | செலுத்தப்பட வேண்டிய மீதி விரைவில் தீர்க்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 149(1) ஆம் உறுப்புரை | நிதியத்தின் செயல்பாடுகள் முடிவடைந்த பின்னர் மூடப்பட்ட சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும் கோவிட் 19 நிதியத்தின் நிலுவைகள் முறையே ரூபா 29,254,999 மற்றும் ரூபா 218,712,624 ஆக மொத்தம் ரூபா 247,967,623 ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதே பணம் சனாதிபதி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2022.10.10 ஆம் திகதிய அ.ம.ப/22/1608/601/018 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2022.10.28 ஆம் திகதிய கோவிட் 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் மற்றும் அ.ம.ப/20/1009/212/017 மற்றும் 2020.07.16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் சிறுவர் பாதுகாப்பு தேசிய நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் காசு மீதி சனாதிபதி நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. | காணப்படுகின்ற சட்டவிதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதியத்தின் அதிகாரச் சட்டத்தின் | | | |
| (i) | 03 ஆம் பிரிவு | சனாதிபதி நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் கூட்டமொன்று 2019 ஒக்தோபர் 18 ஆந் திகதி இறுதியாக நடாத்தப்பட்டிருந்ததுடன், அத்திகதியின் பின்னர் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் நிலவிய பிரச்சினைக்குரிய சூழ்நிலை காரணமாக, கூட்டத்தை நடாத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், 2023.05.03 அன்று கட்டுப்பாட்டுச் சபையின கூட்டம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை |
| (ii) | 3(2)ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபை ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டியபோதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபை 06 உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்தது. | சனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஏனைய இரண்டு உறுப்பினர்களில் ஒருவர் இராஜினாமா செய்ததால் கட்டுப்பாட்டுச் சபை 06 உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 06 ஆம் பிரிவு | நிதியத்திற்குச் சொந்தமான நிதி, சபையினால் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் சனாதிபதியின் ஏற்பாடுகளின் கீழ் பயன்படுத்தப்பட முடியும். மீளாய்வாண்டின் போது ரூபா 2,688,482,710 ஆன கொடுப்பனவுகளுக்காக கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. | 2023.05.03 நடைபெற்ற கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தில் உரிய கொடுப்பனவுகளுக்காக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை |
| (iv) | 07 ஆம் பிரிவு | நிதியத்திற்குச் சொந்தமான எந்தத் தொகையும் சனாதிபதியால் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளின் கீழ், கட்டுப்பாட்டுச் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏதாவது முறையில் மதலீடு செய்யப்பட முடியும். மீளாய்வாண்டில் நிலையான மற்றும் காலரீதியான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 8,955 மில்லியனுக்காக 2023 மார்ச் 31 வரை கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | 2023.05.03 நடைபெற்ற கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தில் நிலையான மற்றும் காலரீதியான வைப்புகளுக்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை |
| (இ) | 2018 யூலை 26 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை | சனாதிபதியினால் நிர்ணயிக்கப்படும் விசேட செயற்திட்டங்கள் தொடர்பில் நிதி சேகரித்தல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக நிதியத்தினால் இலங்கை மத்திய வங்கியில் பேணிச் செல்லப்படும் (46051) 51202 ஆம் இலக்க வங்கிக் கணக்கு 2019 அம் ஆண்டு முதல் 2022 வரையான 04 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக செயலற்ற நிலையில் பேணப்பட்டு வருவதுடன் , சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்குகளை மூடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023.05.03 நடைபெற்ற கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தில் (46051) 51202 ஆம் இலக்க கணக்குகளை மூடுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மருத்துவமனை கட்டணங்களைத் தீர்ப்பதற்கு வசதியாக, சென்னையில் உள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகர் அலுவலகம் 2010 முதல் பணம் செலுத்துவதற்கு | தற்போது இந்தக் கணக்கில் ஒரு மில்லியன் ரூபாய்க்கும் குறைவான தொகையே இருப்பு உள்ளதால், மீதித் தொகை முடிந்த பிறகு, தேவைப்படும் | நிதியம் செயற்திறனாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முற்பணக் கணக்கைப் பராமரித்து வருவதுடன், 2010 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 3 மில்லியன் வீதம் ரூபா 6 மில்லியன் முற்பணத் தொகையொன்றாக வழங்கப்பட்டிருந்தது. 2010 முதல் மீளாய்வாண்டின் தொடக்கம் வரையிலான 12 ஆண்டுகளில், இந்த கட்டுநிதி கணக்கிலிருந்து பணம் எதுவும் செலுத்தப்படவில்லை. மீளாய்வாண்டில் மீண்டும் ரூபா 1 மில்லியன் இடைக்கால கட்டுநிதியொன்று சனாதிபதியின் செயலாளரின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் மட்டும் ரூபா 400,000 தொகையொன்று இந்த கட்டுநிதி கணக்கிலிருந்து செலவுகளாகக் கழிக்கப்பட்டிருந்தது. இந்தத் தொகை திரும்பப் பெற முடியாத வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் சென்னை கட்டுநிதிக் கணககு ரூபா 6.68 மில்லியனாக இருந்ததுடன் இக்கட்டுநிதி பயன்படுத்தப்படாமையால் அத்தொகை குறைப்பயன்பாடுடையதாக காணப்பட்டமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | போது மட்டும் இந்தியாவில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சைகளுக்கு பணம் செலுத்துவவதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் நிதியேற்பாடு பரிமாற்றம் செய்யப்பட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. |
| (ஆ) | சென்னையில் உள்ள இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் அலுவலகத்திலிருந்து 2023 சனவரி 27 வரை கடந்த சில ஆண்டுகளாக திரட்டப்பட்ட அந்நியச் செலாவணி வித்தியாசமான ரூபா 322,051 ஐ துணை உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு திருப்பிச் செலுத்தல் அல்லது காசேட்டில் தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது். இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | பல ஆண்டுகளாக ஏற்பட்ட நிதியத்தின் அந்நியச் செலாவணி அனைத்து வேறுபாடுகள் தொடர்பான செலவுகளும் சீர்திருத்தங்கள் 2023 ஆம் கணக்கீடு ஆண்டில் செய்யப்படும் செய்யப்பட என்பதை அன்புடன் வேண்டும். குறிப்பிடுகிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,728,990,690 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கொத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 1,708,287,272 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 20,703,418 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் செலவினங்கள் அதிகரித்த அளவை விட அதிகளவில் வருமானம் அதிகரித்திருந்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்காக மொத்தம் ரூபா 1,364,.62 மில்லியனும் , கடந்த வருடத்தில் அதற்காக ரூபா 139.16 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதியத்தின் உதவிகள் ரூபா 1,225.46 மில்லியனால் அல்லது 880 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. கடந்த வருடங்களில் விண்ணப்பித்த மருத்துவ உதவிகளுக்காக மீளாய்வாண்டில் பணம் செலுத்தியதன் காரணமாக செலவுகள் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட ஏறக்குறைய 12000 விண்ணப்பங்கள் அப்போது எடுக்கப்பட்ட கொள்கை முடிவின் அடிப்படையில் பணம் செலுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டதுடன், 2022.07.28 இற்குப் பிறகு நிறுத்தப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் கௌரவ ஜனாதிபதி அவர்கள் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி பரிசீலிக்கப்பட்டு நலன்கள் வழங்கப்பட வேண்டிய நோயாளிகளுக்கு நலன்களை வழங்குவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதால் நிதிப் பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் நலன்கள் செலுத்தப்படல் விரைவு படுத்தப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் நிதியத்தினால் மருத்துவ உதவி கொடுப்பனவுகளுக்காக ரூபா 1,341.99 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன், கடந்த ஆண்டில் ரூபா 131.86 மில்லியன் செலவிடப்பட்டது. இதன்படி, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மருத்துவ உதவி கொடுப்பனவுகள் ரூபா 1,210.12 மில்லியன் அல்லது 918 வீதத்தால் அதிகரித்துள்ளது. | 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட ஏறக்குறைய 12000 விண்ணப்பங்கள் அப்போது எடுக்கப்பட்ட கொள்கை முடிவின் அடிப்படையில் பணம் செலுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டதுடன், 2022.07.28 இற்குப் பிறகு நிறுத்தப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் கௌரவ ஜனாதிபதி அவர்கள் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி பரிசீலிக்கப்பட்டு நலன்கள் வழங்கப்பட வேண்டிய நோயாளிகளுக்கு நலன்களை வழங்குவதற்கான | நிதியத்தின் நலன்கள் செலுத்தப்படல் விரைவு படுத்தப்பட வேண்டும். |
| (iii) | இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெளிநாட்டு மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ சிகிச்சைக்காக மீளாய்வாண்டில் ஒரு தனிநபருக்கு | சனாதிபதி நிதியத்தின் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சனாதிபதி அவர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் இவ்வாறான கொடுப்பனவகள் மேற்கொள்ளப்பட்டன. | நிதியத்தின் நலன்களை செலுத்தும்போது அதிக எண்ணிக்கை யிலான பயனாளிகளுக்கு பயனளிப்பதில் |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்ட அதிகூடிய பெறுமதியான ரூபா 6.083 மில்லியன் மற்றும் ரூபா 6.955 மில்லியன் வீதம் மொத்தம் ரூபா 13.038 மில்லியன் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | கவனம் செலுத்த வேண்டும். |
| (iv) | குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தகுதிபெறும் மாணவர்களுக்காக வழங்கப்படுகின்ற புலமைப்பரிசில்கள் மற்றும் சிறப்புத் திட்டங்களுக்கு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் முறையே ரூபா 200 மில்லியன் மற்றும் 7பா 25 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலம் மீளாய்வாண்டில் மற்றும் கடந்த வருடத்திலும் எவ்வித தொகையொன்றும் செலுத்தப்படவில்லை. | கோவிட் தொற்றுநோய் மற்றும் சிக்கலான நிலைமைகள் காரணமாக, மீளாய்வாண்டிலும் அதற்கு முந்தைய ஆண்டிலும் புலமைப்பரிசில்கள் மற்றும் சிறப்புத் திட்டங்களுக்கு பணம் செலவிடப்படவில்லை. ஆனால் 2023ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. | நிதியத்தின் அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்று வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (v) | சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிதி மீளாய்வாண்டில் ஈடுபடுத்தப்பட்ட செயற்பாடுகள் குறித்த பௌதீக மற்றும் நிதித் தகவல்களை உள்ளடக்கிய செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. பல வருடங்களாக இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இத்தேவையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் சிக்கல் நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி பணிகளைச் செய்ய இயலாது என்றும், 2023 ஆம் ஆண்டிற்கான நோக்கங்களை அடைவதற்கு செயல் நடவடிக்கைத் ஹ திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. | சட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு முறையான செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பது அவசியம். |
| (vi) | எவ்வாறாயினும், மீளாய்வாணடிற்காக தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, மொத்தம் ரூபா 23.2 மில்லியன் மதிப்பிடப்பட்ட செலவில் 7 செயற்பாடுகள் | கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் சிக்கல் நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி பணிகளைச் செய்ய இயலாது என்றும், 2023 ஆம் ஆண்டிற்கான நோக்கங்களை அடைவதற்கு செயல் நடவடிக்கைத் ஹ திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை எவ.வித பணிகளும் ந்த வேலையும் முடிக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில், இதய அறுவை சிகிச்சை, புற்றுநோய், மூளை தொடர்பான நோய்கள், முழங்கால் மற்றும் இடுப்பு தொடர்பான நோய்கள், சிறுநீரக நோய்கள் மற்றும் பிற சிகிச்சைகளுக்கு 5,101 நோயாளிகள் மருத்துவ உதவி கோரியிருந்த போதிலும் 2,750 நோயாளிகள் மட்டுமே மருத்துவ உதவித் தொகையைப் பெற்றுள்ளனர். கடந்த வருடம் இவ்வாறான நோய்களுக்காக 1,322 நோயாளர்களுக்கு மருத்துவ உதவிகளாக பணம் செலுத்தப்பட்டுள்ளது. இதன்படி, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டின் போது மருத்துவ உதவிகளை செலுத்திய நோயாளர்களின் எண்ணிக்கை 1,428 இனால் அல்லது 107 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டில் விண்ணப்பங்களை சமர்ப்பித்த நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் நலன்களைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது அது 54 சதவீதம் மட்டுமே ஆகும். | பதில் வழங்கப்படவில்லை. | நிதியத்தின் நோக்கங்கள் அதிகபட்சம் அடையப்பட வேண்டியது அவசியம். |